# சங்க இலக்கியத்தில் ஆவிவழிபாடு

*முனைவர் மு. ரமேசு*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசினர்ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

மலர்: 4

இதழ்: 2

மாதம்: அக்டோபர்

வருடம்: 2019

ISSN: 2454-3993

## முன்னுரை

பழந்தமிழில் வரக்கூடிய கொற்றவை, பெருங்காட்டுக் கொற்றி, காடமர் செல்வி, கடல்கெழு செல்வி, துணங்கையம் செல்வி, பழையோள், சூர், அணங்கு, முருகு, கொல்லிப் பாவை, விடரகத்துச் சூலி, சூரர மகளிர், வானற மகளிர், பேய், பேய் மகளிர் போன்றவை அனைத்தும் ஆவியோடு தொடர்புடைய தெய்வங்களாகத் தெரிகிறது. இந்தத் தெய்வங்களனைத்தும் மக்களுக்கு அச்சம் தரக்கூடியன, ஆபத்தைச் செய்யக்கூடியன. அதனால் மக்கள் இத்தெய்வங்களுக்குப் பலிகொடுத்துத் தங்களைத் தீமையிலிருந்து காத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

மலைச் சரிவுகளிலும், மலை உச்சியிலும், குளக்கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும், நீர் சுழித்தோடும் பகுதிகளிலும் காடுகளிலும், மரங்களிலும் செடிகளிலும், பூக்களிலும இந்தத் தெய்வங்கள் தங்கியிருக்கின்றன. இது மூத்தோரின் வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையது. பிரசவத்தின்போது மரணமடைந்த பெண்களும், நோயுற்று இறந்த பெண்களும் தெய்வங்களாக இவ்வுலகில் உலவுகின்றனர் *(டி.டி.கோசாம்பி, 2005: பக்.101.)* இவ்வாறு இறந்தோர் பெண் தெய்வங்களாக, தாய்த் தெய்வங்களாக, பேய்களாக இதுவும் ஒருவகையான தெய்வமாக உருவெடுக்கின்றனர். இவ்வகைப்பட்ட தெய்வங்களே மேற்சுட்டப்பட்டவையாகும்.

## ஆவி உருவாக்கம்

இறந்துபோன மனிதர்கள் தங்களுடைய நிறைவேறாத ஆசை களைக் கொண்டு ஆவிகளாக அலைகின்றனர் என்ற நம்பிக்கையுண்டு. இந்த ஆவி உருவாக்கம் நிலம், பொழுது, ஆள் என்பனவற்றோடு தொடர்புடையது என விளக்குகிறார் பிலவேந்திரன். இறந்து விட்ட மனிதரைக் காலமாகிவிட்டார், இயற்கை எய்தி விட்டார் எனக் கூறப்படுவதுண்டு. இது மனிதவாழ்வு காலத்தோடும் இயற்கையோடும் தொடர்புடையது என்பதைக் காட்டுகிறது. பாதியில் மரணமடைந்தோரை அகால மரணமடைந்து விட்டார் என்பர்.

இறப்பதற்குரிய காலம் வாராமலேயே இறந்துவிட்டார் என்பதைக் காட்டுகிறது. நடுபகல், பொழுது சாயும் நேரம், நடுசாமம் ஆகிய நேரங்களில் ஆவிகள் நடமாடும். மரணித்த மனிதர்களின் ஆவி அலைந்து எதிர்வரும் தன்னை ஒத்த பருவத்தை உடையவர் மீது தாவிவிடும் என்கிற நம்பிக்கை உண்டு. இந்தவகையில் கடந்த கால மனிதர், நிகழ்கால மனிதரோடு தொடர்புடையவராகிறார். புலனறிதலுக்கு உட்படும், கடந்தகாலம், நிகழ்காலம் பற்றிய நம்பிக்கைகள்தான் பழந்தமிழரிடம் இருந்தது. நிச்சயமற்ற எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இருக்கவில்லை. கடந்தகால மனிதர்களின் அனுபவங்கள், நிகழ்கால மனிதரோடு ஆற்றல் வடிவிலான அனுபவமாக வந்து சேருகின்றன.

கடந்தகால மனிதரின் நினைவுகள் ஆற்றல் அல்லது ஆற்றல் சார்ந்த ஆவி வடிவில் நிகழ்கால மனிதரோடு இருத்தப்படுகின்றன அல்லது தங்கவைக்கப்படுகின்றன. கடந்தகால மனிதர் பற்றிய நினைவுகள், நிகழ்கால வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு செயலோடும் பொருத்தப்பட்டுப் பல்வேறு உணர்வுக் கூறுகளின் வண்ணக் கலவையாக உருவகப்படுத்தப்படுகிறது. பிறப்பு முதல் இறப்புவரை உள்ள ஒவ்வொரு கட்டத்தின் போதும் மூத்தோர் நினைவு கூறப்பட்டு வழிபடப்படுகின்றனர். மூத்தோர் இந்த நிகழ்கால உலகைக் கண்காணிக்கின்றனர், தீமையையும், நன்மையையும் மாறிமாறி செய்கின்றனர். இவற்றைத் தாக்கணங்கு, சூர், பேய், முருகு எனச் சங்கச் செய்யுள்கள் விவரிக்கின்றன. இவைகுறித்து சிறிது விளக்குவது தகும்.

## அணங்கு

அச்சுறுத்தும் தெய்வங்களுள் அணங்கு முதன்மையானது; இது ஆற்றல் வடிவிலானது; ஆண்-பெண் இருவரையும் அச்சுறுத்தக் கூடியது; வணங்குதலுக்கு எதிர்நிலையானது; தாக்கணங்கு, ஆரணங்கு, ஊரணங்கு என இவ்வணங்கு விவரிக்கப்படுகிறது.

அணங்கு என்னும் சொல்லுக்கு, “தன் அழகாலே வருத்தம் செய்வது என்று பொருள். “வணங்குதல்” என்ற சொல்லுக்கு எதிர்பதம் “அணங்குதல்” என்கிறார் தொ.பரமசிவம். (தொ. பரமசிவம்-சுந்தர்காளி, 2008: பக்.52)

பேராசிரியர் ஜார்ஜ்ஹார்ட், அணங்கு என்பதைப் பெண்களிடையே இருந்த ஆபத்தைத் தரக்கூடிய சக்தி என்கிறார். மேலும் இராஜம் செய்த ஆய்வின்படி அணங்கு என்ற சொல்லின் பொருளை ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் அடக்கமுடியாது எனவும் அதற்குப் பல்வேறு அர்த்தங்கள் இருப்பதாகவும் கூறுகின்றார் (The Poems of Ancient Tamil, Geurge L. Hart, 1975).

அணங்கு என்பது அமானுஷ்ய சக்தி, விலங்கு சாராத, இயற்கை இறந்த ஆற்றல். அது கடல், மலை, காடு, ஆறு ஏனைய நீர்நிலைகளில் உறைவது என்றும் தீண்டி துன்புறுத்துவது என்றும் ஆவியாகவும் பண்டைக் காலத்தில் நம்பப்பட்டது. என விளக்குகிறார் (ஆ. தனஞ்செயன், 2010: பக்.68).

**அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப்**
**பிணங்கல் சாலா வச்ச நான்கே**

**(தொல். மெய். சூ. 265)**

என்று அச்சம் தோன்றுவதற்கான நிலைக்களன்கள் நான்கனுள் தொல்காப்பியம் அணங்கை முதன்மைப்படுத்துகிறது. அணங்கு என்னும் சொல் குறித்து பேராசிரியர் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்:

அணங்கென்பன, பேயும் பூதமும் பாம்பும் ஈறாகிய பதினெண்கணனும், நிரயபாலரும்,

பிறரும் அணங்குதற்றொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும், உருமிசைத் தொடக்கத்தனவு மெனப்படும் என்கிறார்.

இங்கே பதினென் கணங்களெனப் பேராசிரியர் குறிப்பிடுவன அசுரரும் முனிவரும், கின்னரரும், கிம்புருடரும், கருடரும் இயக்கரும், இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் போகபூமியினரும் ஆகாயவாசிகளும் என இவர்.

அடிக்குறிப்பில், நிரயப்பாலர் - நிரயத்தலைவர் என்றது காலன் முதலியோரை நிரயப் பாலகர் என்றும் பாடம் கொள்ளப்படும். அணங்கல் என்பதற்கு வருத்தம் என்பது பொருள். உரும்-இடி எனப் பொருள் (தொல். பொருள். பேரா. உரை. பக். 22-23).

மேலே காட்டப்பட்டுள்ள உரை விளக்கம் மற்றும் அடிக்குறிப்பிலிருந்து அணங்கு என்னும் சொல்லுக்கு "அச்சம்", "வருத்தம்" எனும் பொருளிருப்பதனை அறிய முடிகிறது. மேலும் சற்றுக் கூர்ந்து நோக்குகையில் அணங்கு என்னும் சொல்லுக்கான பொருள்களாக வருத்தம், தெய்வம், அச்சம், பேய், அழகு, தெய்வத்தன்மை போன்றவையும் கூறப்படுகிறது. சங்க இலக்கியத்தில் அகநானுறு, புறநானுறு, ஐங்குறுநாறு, குறுந்தொகை, கலித்தொகை, திருமுருகாற்றுப்படை, நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், மதுரைக்காஞ்சி ஆகிய நூல்கள் அனைத்திலும் அணங்கு பற்றிய பதிவுகள் இருப்பதாக விவரிக்கிறார் குறுந்தொகையில் அணங்கு ஆய்வாளர் மு. சரோஜாதேவி. மலைகள், காடுகள், மரங்கள், நீர்நிலைகளான அருவிகள், ஆறுகள், கடல்கள் போன்றவற்றிலும் அணங்கு போன்ற தெய்வங்கள் வீற்றிருக்கின்றன. இவ்வகையான நம்பிக்கை வளர்ந்த கட்டத்தை அநாகரிக கட்டம் என மதிப்பிடுகிறார் வெ. பெருமாள்சாமி.

**"நம்படப்பைச் சூருடைச் சிலம்பில்**
**சுடர்ப்பூ வேய்ந்து**
**தாம்வேண்டு உருவில் அணங்குமார் வருமே"**

அச்சம் தரும் தெய்வம் உறைகின்ற மலையில் உள்ள பூக்களைச் சூடிக்கொண்டு தெய்வமகளிர் நம் சோலையில் பலியுணவை ஏற்பதற்காக வருவார்கள் என்று அகநானூறு(158) கூறுகிறது.

"அணங்குடை முந்நீர்" என்பது கடலில் அணங்கு இருப்பதைக் காட்டுகிறது.

சினைச் சுறவின் கோடு நட்டு மனைச் சேர்த்திய வல்லணங்கு எனவரும் பட்டினப்பாலையில் கடலில் இருக்கும் வல்லணங்கை நெய்தல் நிலமக்கள் சுராக் கொம்பை நட்டு வழிப்பட்டனர் என்பதைப் பெறமுடிகிறது. முல்லைநில மக்கள் எருமைக் கொம்பை நட்டு இத்தெய்வத்தை வழிபட்டனர் என்கிறது முல்லைக் கலி.

ஆமான் மேல் அம்பெய்த கானவன் அம்புகுறி தப்பியதற்கு மலையுறைத் தெய்வத்தின் சினமே காரணம் என்று கருதி அத்தெய்வத்தின் சினத்தைத் தணிப்பதற்காகப் பலியிட்டு நீர் வளாவினான். இதனை,

**அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது**
**பணைந்த பகழி போக்கு நினைந்து கானவன்**
**அணங்கொடு நின்றது மலைவான்**
**கொள்கெனக்**
**கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து**
**கிளையொடு மகிழும்**

என்று நற்றிணை(165) கூறுகிறது. தவிரவும் பழம்பதிகளில் தாக்கணங்கு உறைவது பற்றி மேலே விளக்கப்பட்டது. அணங்கு பாலறியாத் தெய்வம் ஆண்,

பெண் இருவரையும் துன்புறுத்தக்கூடியது என்றாலும் பெரும்பாலும் ஆண்களே அணங்கு பற்றி துன்புறுகின்றனர். இதனால் இது பெண்மையாற்றலின் உருவகம் என விளக்க வேண்டியுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை செய்துள்ள பேராசிரியரும் சவம்தின் பெண்டீரும் பேய்மகளிரும் என அணங்கை விளக்குகிறார்.

தொல்காப்பியமும் அச்சம் தோன்றுவதற்கான நிலைக்கலன்கள் நான்கனுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. அச்சம், அழகு, வருத்தம், தெய்வம் ஆகிய பொருள் தரும்படியாகப் புறநானூற்றில் 13 பாடல்களில் அணங்கு கையாளப்பட்டுள்ளது (மு. இரமேஷ், 2014: பக்.49.)

**நல்லவர்க்கு ஆர் அணங்கு ஆகிய மார்பின்**

**(14.16---17)**

**உடலருந் துப்பின் ஒன்றுமொழி வைந்தரை**
**அணங்கு அறும் பரந்தலை உணங்கப் பண்ணி**

**(25.1)**

**அணங்குடை நெடுங்கோட்டு அலைகம் முனையீ**
**வணங்கு தொடைப் பொலிந்த வளி கெழுநோன்தாழ்**

**(52.1)**

**அணங்குடை அரும் கடுந்திரள் (2.78.1-2)**

**ஆடுமலை அணங்கு சால் அடுக்கம் பொலியும் நும்**
**மணங்கமழ் மாள்வரை வரைந்தனர் எமரே**

**(151.10-11)**

**அணங்குடை அவுனர் கணங்கொண்டு ஓழித்தன**

**(174.1)**

அணங்கு பெண்மையின் பதிலீட்டு உருவகமாக இருக்கும் அதே சமயத்தில் முருகனோடு இணைத்தும் பேசப்படுகிறது. இந்தச் சூழலில் பெண்மையிலிருந்து பெண்ணுடல் வேறுபட்டதாகவும் அதாவது, தீட்டாகவும் நம்பும் போக்கைக் காணமுடிகிறது.

**அணங்குடை முருகன் கோட்டத்துக்**
**களம் தொடா மகளீரின் இகந்து நின்ற அவ்வே**

**( 299.7-6)**

இது அசலான தமிழின் அகப்பரப்பு புறமரபினால் பாதிக்கப்பட்டபோது தோன்றிய அரசியல் வடிவத்தினால் ஏற்றுப் பேணப்பட்ட பண்பாடு எனலாம். மேலது புறமரபில் பகைவீரர்களையும் அகமரபில் ஆண்களையும் ஆடவரைத் தாக்கக்கூடியது அணங்காகும். தமிழ் நிலத்தின் தொல் சமயங்கள் என்பவை முழுமையான வடிவம் கொண்டவை இல்லை. அவை அச்சம் தரும் ஆற்றல்களின் உருவக வடிவங்களை வணக்கத்திற்கு உரியவையாகக் கொண்டிருந்தவை. அவற்றிற்கு ஏதோ ஒருவகையில் பலியும், படையலும் அளித்துத் தமக்குத் தீங்கு வராத வகையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது அடிப்படை நம்பிக்கையாக இருந்தது. நன்மை, தீமை என்பவை தனித் தனி வடிவங்களாகப் பிரிக்கப்படாமல் ஒரே வடிவத்தின் இருகுணங்களாக அறியப்பட்டு இருந்தன. அணங்கு போன்ற உருவகங்கள் இத்தன்மை உடையவையே. இவை அச்சத்திற்கு உரியவையாக இருந்தன. அதேசமயம் ஆற்றல் உடைய ஆக்க சக்திகளாகவும் இருந்தன. இவற்றை மனிதர்கள் கையாளும்வகையிலேயே ஆக்கமும், அழிவும் விளையும் என்பது அடிப்படையான கருதுகோளாக இருந்தது என்னும் (2006, ப. 103) பிரேம்-ரமேஷின் இக்கருத்து ஒப்புநோக்கத்தக்கது.

பழந்தமிழர் தங்களை அச்சுறுத்தும் இயற்கையாற்றல்களை வழிபட்டனர். பாம்பு உள்ளிட்ட உயிரினங்கள், மரங்கள், மலைகள், நீர்நிலைகள், காற்று, மழை, கடும்வெய்யில் போன்றவற்றை வழிபட்டனர். இவ்வாற்றல்களுள் அணங்கும் ஒன்று. மேலே தொகுத்து விவரிக்கப்பட்டுள்ள அணங்கு குறித்த விளக்கங்களிலிருந்து இக்கருத்தை உறுதிபடுத்தமுடியும்.

தோழி, மனையோள் புலக்கும் மகிழ்நற்கு அனையேம் ஆயினம் எனில் பவ்வம் அணங்குக என்கிறாள் காதற்பரத்தை. தலைவனே தங்களைத் தேடிவந்தான் எனவும் தலைவி கோபம் கொள்ளுமாறு தலைவனைத் தாங்கள் தேடிச்செல்லவில்லை. அவ்வாறு நாங்கள் செய்தோமானால் கடல்தெய்வம் எம்மை வருத்தட்டும் என்கிறாள், காதல்பரத்தை குறு.164.

***தண்பெரும் பௌவம் அணங்குக தோழி***
***மனையோள் மடமையின் புலக்கும்***
***அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனினே***
***(குறு.154)***

இப்பாடலில் "பௌவம் அணங்குக" என்பது "கடல்தெய்வம் வருத்தட்டும்" என்னும் பொருளிலமைகிறது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி தன்னிரக்க மிகுதியால் கடலை நோக்கி யார் அணங்குற்றனை - கடலே (குறு.163:1) ……… நல்லென கங்குலும் கேட்கும், நின் குரலே என நல்லிரவில் தன்னைப்போல தனித்திருந்தும் விழித்திருந்தும் வருந்து வதாகத் தனது கையறு நிலையை உணர்த்து கிறாள். இப்பாடலிலும் "அணங்கு" எனும் சொல் "வருத்தம்" என்னும் பொருளையே நேரடியாகச் சுட்டுகிறது.

குறுந்தொகை 119ஆம் பாடலில் புணர்ச்சியின் இன்பத்தையும், புணர்ந்து பிரிந்ததால் உண்டான வருத்தத்தையும் பாங்கனிடம் தலைவன் கூறும் சூழலில் இளையள், எயிற்றள், தையல், எம் அணங்கியோள் எனத் தலைவியின் பண்புகள்சுட்டப்பட்டுள்ளன. இப்பாடல்களில் வரும் தலைவனை வருத்தும் ஆற்றல் தலைவியின் உடலில் காணப்படுகிறது என்கிற குறிப்பு மிக முக்கியமானது. பொதுவாகப் பெண்ணின் நெற்றி, கண்கள், பற்கள், முலைகள் மற்றும் முலைக்காம்புகளில் இருந்து இவ்வாற்றல் வெளிப்படுவதாக ஆண்களை வருத்தும் ஆற்றல் சங்க அகபாடல்கள் சுட்டுகின்றன.

பெண்மை, தாய்மை இவ்விரு பண்புகளின் வினைவடிவங்கள் அணங்கு எனப்படும் இவ்வாற்றல் எனக் கண்டறிந்த பிறகு முருகனுக்குத் தாய், சிவனுக்கு மனைவி மற்றும் சிவனுக்குள் உறையும் சக்தி என உருமாற்றம் செய்யப்பட்டது. இந்தச் சக்தி வழிபாட்டாளர்கள் சாக்தர்கள் எனப்பட்டனர். சக்தி எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறது எனினும் ஊரின் எல்லையில் அது நிலையாகத் தங்கியுள்ளதாக நம்பப்பட்டுக் கல்வைத்து வழிபடப்படுகிறது. பெரும்பாலும் இவ்விடம் இரு நாடுகளுக்கிடைப்பட்ட காவற்காடாகவோ இரண்டு ஊர்களுக்கிடைப்பட்ட சந்தியாகவோ இரு தெருக்களுக்கிடைப்பட்ட பாதையாகவோ இருக்கும். பெண் தலைமைப் பண்பாடு நிலவிய மக்கள் கூட்டம் வாழும் நிலப்பகுதிகளில் இவ்வழிபாடு காணப்படுவது இயல்பு. இம்மக்கள் போகபூமியர், கந்தருவர் என இந்தியப் புராணங்களில் குறிக்கப்படுகின்றனர். இத்தொடர்கள் பழைய கருத்தோட்டத்தில் தமிழ்மக்களையும் இன்றைய கருத்தோட்டத்தில் திராவிட மக்களையும் குறிப்பதாகும்.

### அணங்கு - பெண்மையும்

அணங்கு இயற்கையாற்றலாக விளங்குவதற்கான சான்றுகள் சங்கச் செய்யுள்களில் பல உண்டு. இவ்வாற்றல் கடந்த கால மனிதரிடமிருந்து வெளிப்பட்டு நிலம் முழுதும் பரவியிருக்க வேண்டும். முன்பு மனிதர்கள் வாழ்ந்து தற்போது வெளியேறிவிட்ட பழம்பதிகளில் அணங்கு இருக்கிறது, அங்கு செல்லாதே என்று பெரியோர் தம் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துகின்றனர்.

பாம்பு, யானையைக் கொல்லும் யாழி, பகைவரைக் கொல்லும் வீரமார்பு, சுனை, கடல், மலை, தலைவியை வருத்தும்

தலைவனின் தோள் மற்றும் மார்பு, தலைவனைத் துன்புறுத்தும் தலைவியின் முலைகள் இவை உள்ளிட்ட அச்சுறுத்தும் பலவும் அணங்கு என விவரிக்கப்படுகிறது. சிவன், திருமால், இந்திரன் ஆகியோரும் அணங்குடையோரென பரிபாடல் காட்டுகிறது.

வானத்திலிருந்து அணங்கு வருகிறது என மதுரைக்காஞ்சி சுட்டுகிறது மது.கா. 435-436; சுணங்குடைய வனமுலையில் அணங்கு இருக்கிறது பொரு. 35-38; நற்றிணைப் பாடல் ஒன்று தலைவியின் தோளை அணங்கு என்கிறது 9; வேண்டிய உருவில் அணங்கு வரும் என அகநானூறு 161 குறிப்பிடுகிறது. அணங்குக்குப் பொதுவாக உருவம் கிடையாது. ஆனால் வேண்டிய உருவில் வரும் என்பது முந்தையோரின் ஆவி என்பதை மறைமுகமாக இப்பாடல் சொல்கிறது.

புறத்திலும் அகத்திலும் அச்சுறுத்தும் ஆற்றல் அணங்கு. புறம் ஆண்மை, அகம் பெண்மை எனப் பகுத்தறிய முடியாத காலத்தில் தாய்த் தலைமைச் சமூகமாக இச்சமூகம் விளங்கிய நிலையில் கொற்றவை ஆற்றலே அல்லது கொற்றவை போன்றதொரு பெண்ணின் தாயின் ஆற்றலே அணங்காக வெளிப்பட்டிருக்க வேண்டும். பெண்ணுடல் இயற்கை ஆற்றல் நிரம்பியது, இதனால் இவ்வுடலில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலும் சடங்குவழியாக அடையாளப்படுத்தப்பட்டது.

பூப்புச் சடங்கு, வதுவை சடங்கு, சிலம்புகழிச் சடங்கு, கரு உயிர்த்த சடங்கு, மகப்பேறு சடங்கு போன்றவற்றைக் குறிப்பிடமுடியும். காது வளையம், மகரக் குழை, கைவளையல், தொடி, காலில், சிலம்பு, மூக்கு, வளையம் போன்றவற்றை அணிந்தவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர் ஆயிழை, சேயிழை. இவ்வகைப்பட்ட அணிகலன்கள் அணிவதன் மூலம் அச்சுறுத்தும் தீய ஆற்றல்களிடமிருந்து காக்கப்படுவதற்காக அணியப்பட்டது. இது வளமை, செழிப்பு என்பதன் பதிலீடாகவும் ஆகலாம். பெண் நிலமகள், மாநில மடந்தையென நிலத்தோடு இணைத்து உருவகிக்கப்படுகிறாள். ஆக்கல், அழித்தல் இவ்விரு பண்புகளின் பொது க்களமாகப் பெண் இருப்பதனால் இவ்வாறு உருவகம் தொல் மனதில் சாத்தியமானது. ஆக்கல், அழித்தல் இவ்விரு பண்புகளின் பொதுவான அணங்கு சூர்-சூரர மகளிர் என இணைத்துச் சுட்டப்படுகிறது. இங்கு சூர், சூரர மகளிர் குறித்துச் சிறிது விளக்குவது தகும்.

### சூர் - சூரர மகளீர்

அணங்கைப் போலவே சூரும் அச்சுறுத்தும் தெய்வமாகும். சூரும் மலைகள், காடுகள், மரங்கள், சுனை, கடல் உள்ளிட்ட நீர்நிலைகள் எனப் பலவற்றிலும் தங்கியிருக்கிறது. அணங்கும் ஆற்றலை அச்சுறுத்தும் ஆற்றல் எனக் கூறப்பட்டுள்ளது, இவ்வகை ஆற்றலை உடையோர் சூர் அல்லது சூரர மகளிரெனப் பட்டனர். இவர்கள் வானத்திலிருந்துவரும் வான் தேவதைகள், வானற மகளிராவர். நீர்நிலைகளில் இறக்கிறபோது நீரற மகளிராவர். மலைப்பக்கத்தில் உள்ளபோது வரையறமகளிராவர்.

மலையில் யானை மிதித்த பள்ளத்தில் மழைநீர் தங்குவதைபோல தலைவன் ஒருவனால் நீ கவரப்பட்டு சூருற்று நடுங்குவதைக் கண்டேன், அதனால் அறத்தோடு நின்றேன் எனத் தோழி தலைவிக்குச் சொல்வதாகக் குறுந்தொகைப் பாடல் ஒன்று வருகிறது 52.

ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பிற் சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே சிலம்பிற் சூரென்றது மலைப் பக்கத்தில்

வாழும் தெய்வங்களை; அவர் வரையர மகளிரெனப்படுவர்; சூரர மகளி ராரணங் கினரே.......... நீவர லாறே என்பது பழம்பாடல் ஒன்று குறுந்தொகைப் பதிப்பு, ப.114 என உ.வே.சா. குறிப்பிடுகிறார். மேலும் சூர் அகத்திலும் புறத்திலும் வருகின்றன இவற்றைத் தொகுத்துக்காட்டுவது பொருத்தமானது.

சூர்-1. அச்சம் தரும் தெய்வம். நின்படை. நட்புடையார்க்கும் காப்பாகி பகைவர்க்குச் சூர் - அச்சம் தரும் தெய்வம் - தோன்றி வருத்தினாற் போன்றதாயிருக்கின்றது எனக் களங்காய்க்கன்னி நார்முடிச்சேரலின் படை சிறப்பிக்கப்படுகிறது (பதி. 31: 34-35). சூர் விரும்பும் காந்தட்பூவை ஊதிய தும்பி, பறக்கும் தன்மையை இழக்கும் (பதி. 67: 19-21). சூர்ஏறியமயில்நடுங்கும் (குறி. 169). தலைவனது மலைமுழைஞ்சு, தவறாது துன்பம் தருகின்ற சூர் உறையபெறும் (குறி. 255-261) சூர் விரும்பியுறையும் பக்கமலை (மலை. 239; அகம். 359: 11) சூர் உறையப் பெற்ற சுனை (அகம். 91:4 நற். 7:1; 268:1). சூர் உறையும் மலையினையுடையவன் தலைவன் (அகம். 98:5; ஐங். 249:4). சூருடைய மலையையடுத்த நம் தோட்டத்தில் ஒளி தங்கிய பூவைச் சூடிக்கொண்டு விரும்பிய உருவத்தோடு ஒரு தெய்வம் வருதலுமுண்டு எனத்தோழி செவிலியிடம்கூறினாள் (அகம். 158:7-8). அடியில் சூர் இருக்கப்பெற்ற ஓமை மரங்களையுடையது காடு (அகம். 277:11) சூர் விரும்பியுறையும் அகன்ற இடத்தையுடையது கொல்லிமலை (அகம். 303:5-6). இந்தச் சூர், சூரர மகளிரெனப் பெண்களோடு தொடர்புப்படுத்திச் சுட்டப் பெறுகிறது. தலைவன் சூரர மகளிர் முன்னிலையில் தலைவியை மணந்து கொள்வதாகச் சூளுரைத்தான், என்று குறுந்தொகை 53 சுட்டுகிறது.

**எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்**
**நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்**
**வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்**
**செந்நெல் வான்பொரி சிதறி யன்ன**
**எக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை**
**நேரிறை முன்கை பற்றிச்**
**சூரர மகளிரொ டுற்ற சூளே.**

அரமகளைத் தேவ மகள் என்று, அரைத் தெய்வத்தன்மை கொண்ட ஒரு தனியினமாகக் கூறுவது இலக்கிய வழக்கு. அர மகளிர், மலையர மகளிர் நீரர மகளிர் என இருவகையர்; இருவகையரும் அடுத்த மாந்தரை அச்சுறுத்திக் கொல்வதால், சூரர மகளிர் எனப்படுவர். சூர் என்பது அப்பெயர்க் குறுக்கம் தமிழர் மதம், ப.11 என விளக்கும் பாவாணர், மேலும் இது குறித்துப் பன்மையிற் குறிக்கப்பட்டதனால், அவர் கூட்டங் கூட்டமாக வாழ்வதாகக் கொள்ளப்பட்டனர் போலும்! எனக் கூறுகிறார்.

கிடைக்கின்ற சங்க இலக்கியச் சான்றின்படி பெண்வீட்டில் நடைபெறும் வதுவைச் சடங்கை முன்னின்று நடத்தும் செம்முதுபெண்டீரின் அகம். 86, 136 பழைய தாயாதிகளாக அல்லது தாயாதிகள் குறித்த உருவகமாகச் சூரர மகளிர் இருக்கலாம்.

**பெருவரையடுக்கம் பொற்பச் சூர்மகள்**
**அருவி இன்னியத்து ஆடும்**

(பெரிய மலைச் சாரல்களில் வீழும் அருவியின் இசைக்கு ஏற்ப தெய்வ மகளிர் ஆடுவர்) என்று நற்றிணை (34) கூறுகிறது.

சூர் என்பதற்கு மூங்கில் என்கிற பொருளுண்டு. மலைப் பக்கத்தில் மூங்கில் புதர்கள் இருப்பதுண்டு. அருவி நீர் பட்டு அதற்கேற்ப ஆடும். காற்றுப்பட்டு ஓசை வருவதுவும் உண்டு, இது பழங்கால மக்களை அச்சுறுத்தியிருக்கலாம் அல்லது அம்மக்கள் அசையும் மூங்கிலின் ஓசையைக் கேட்டு அச்சப்பட்டிருக்கலாம். இந்த இயற்கையாற்றல் மூங்கிலில் உறையும் சூராக நம்பப்பட்டது. இந்த

இன்னியம் கரங்கும் மூங்கில் சூர் இசையைக் குறிக்கும் சுரம் எனப்பட்டதா என்பது ஆராயப்படவேண்டியது.

**நம்படப்பைச்**
**சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து**
**தாம்வேண்டு உருவில் அணங்குமார் வருமே**

(அச்சம் தரும் தெய்வம் உறைகின்ற மலையில் உள்ள பூக்களைச் சூடிக் கொண்டு தெய்வமகளிர் நம் சோலையில் பலியுணவை ஏற்பதற்காக வருவார்கள்) என்று அகநானூறு (158) கூறுகிறது.

சூரர மகளிர் ஆடுவதும், பலியேற்பதும் மேலே காட்டப்பட்ட பாடல்களிலிருந்து பெறமுடிகிறது. சூரனைக் கொன்றதனால் இப்பெண் தெய்வங்கள் சூரெனப் பட்டனர். பசுக்களும் எருமைகளும் இத்தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கம் இன்றும் நடப்பில் உள்ளது. சூர் என்ற பெண் தெய்வம் நாளடைவில் முருகன் என்கிற ஆண் தெய்வத்தோடு இணைத்துக் காட்டப்பட்டது. பெண் தெய்வம் மகிடாசூரனைக் கொன்றது போல முருகனும் பதுமாசூரனைக் கடலிடத்தில் கொன்றது பற்றிக் கூறப்படுகிறது. முருகக் கடவுள் கடுஞ்சூர் கொன்றமையை,

**பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்**
**சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்**
**............................ சேஎய் (45-61)**
**எனவரும் திருமுருகாற்றுப் படையானும்,**
**.............................. மாக்கடன் முன்னி**
**அணங்குடை அவுண ரேமம் புணர்க்கும்**
**சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்**
**கடுஞ்சின விறல்வேள் (11:3.6)**

என வரும் பதிற்றுப்பத்தானும்,

**கடுஞ்சூர் மாமுதல் தடிந்தறுத்தவேல்**
**அடுபோ ராள (9-70-71)**

என்றும்,

**நீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச்**
**சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்**
**(18:3-4)**

என வரும் பரிபாடலானும் அறியமுடிகிறது.

இங்கு வரும் திருமுருகாற்றுப் படை, பரிபாடல் தவிர மற்றைய பாடல்களில் முருகன் அசுரரை அழித்தது, மன்னர்கள் மற்றும் வீரத் தலைவர்களின் போர்ச் செயலோடு இணைத்துக் காட்டப்படுகிறது, என்பது குறிக்கத்தக்கது.

இதனால் முருகனும் சூருடை முருகு எனப்பட்டான். இது தாய்வழிச் சமூகம் தந்தைவழிச் சமூகமாக மாறியதன் அடையாளமாகும். தொடக்கக் காலத்தில் சூரைப் போல முருகும் உருவமற்ற ஆற்றலாக இருந்தது. இந்த முருகு குறித்துச் சிறிது விளக்குவது தகும்.

## முருகு

முருகு என்பதற்கு அழகு, வருத்தம் துன்பம், அச்சம் எனப் பல பொருள்கள் உண்டு. அணங்கு, சூர், கொல்லிப்பாவை, கொற்றவை ஆகிய பெண் தெய்வங்களுக்கு உரிய அனைத்துப் பண்புகளையும் உடையது முருகு. முருகு என்பதற்கான மிக ஆரம்பகாலப் பொருள் அழகு என்று இருந்தாலும் அது அழகினால் தீண்டி துன்புறுத்தக் கூடியதாகும். முருகன் தமிழின் போர்க் கடவுள், ஆனாலும் இது ஆரம்பகாலத்தில் நகைத்துக் கொல்லும் தெய்வம் குறித்த கருத்தாக்கமும் முருகோடு தொடர்புடையது. அல்லது நகைத்துக் கொல்லும் தெய்வமாக முருகும் இருந்தது.

முகம் முழுதும் தன் நகையாலே புன்னகையால் ஒளிவீசி அழகுடைய முருகன் அருணகிரிக்கு அருள் செய்து தற்கொலையிலிருந்து காத்து புதிய மனிதனாக மாற்றினான் [smile of god] என கமில்ஸுவலபில் குறிப்பிடுகிறார். புன்னகையைக் குறிக்க முறுவல் என்கிற சொல் காணப்படுகிறது. இது முருகு என்ற சொல்லின் ஓசை ஒப்புமையோடு மிகவும் பொருந்திப் றகர, ரகர வேறுப்பாட்டைத்

தவிர போகிறது. எள்ளல், இகழ்ச்சி, மகிழ்ச்சி, பெருமிதம் போன்றவற்றை முறுவளித்தலின் மூலம் வெளிக் காட்டப்படுவதுண்டு. காதல், வீரம் இவ்விரண்டிலும் இவ்வகைக் குறிப்புகள் வருகின்றன. எனினும் இது பெரும்பாலும் காமக் குறிப்போடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. தலைவி, பரத்தை உள்ளிட்ட பெண்களின் முறுவலே அழகும், துன்பமும் செய்யக் கூடியது.

முறுவல், தலைவியைத் தலைவன் நீரர மகளிரோ வேறு யாவரோ கூறுக என வினவிய உடன் விடையாக அவளது முட்போன்ற கூரிய பற்களினின்றும் முறுவல் உண்டாயிற்று: கண்களில் பனி பரந்தது: அதனால் அவள் இப்போதும் முயங்கல் குறிப்புடையள்" என்று தலைவன் அறிந்துரைத்தான் நற். *155:9.* "தலைவி முல்லையின் நாளரும்பினைப் போன்ற முறுவலைத் தோற்றிவித்துத் தன் நீலமலர்போலும் கண்களைக் கையால் மூடி மகிழ்ச்சி மிக்கிருந்தது எனக்கு நகையினைத் தருவதாயிற்று" என்று தலைவன் கூறினான் நற். *370:10.*

தாழ்ந்த கொடியை உடைய நறிய முல்லையின் முகைமுகத்தை வண்டுகள் திறப்பது போல, மகளிரின் முறுவலை ஆடவர்திறப்பர்கலி.*118:20.* "சிறுதூறுகள், பிரிந்த மகளிரை இகழ்ந்து முறுவல் செய்வன போல, முகைகள் அவிழ்ந்து விளங்கின" கலி. *119:7.* "ஆயத்தார் எல்லாரும் ஒருங்கே கூடி விளையாடும்போதும், முட்போலக் கூரிய தன் பல்லின் நுனி தோன்றாமல் முறுவல் செய்து, அதனை உள்ளடக்கி அம்முறுவல் குறிப்பினைப் பிறர் அறியாமல் தன் கண்ணாலும் முகத்தாலும் நகுபவள்" தலைவியாவாள் கலி. *142:7.* தலைவி நகையினை முகத்தே உடைய வேழமெனப் பரத்தையைச் சுட்டினாள் கலி.*97.*

நகை, புகழ் உண்டாக அளித்தலைச் செய்யவேண்டுவோர், அச்சமிக்க பொதியிலில் ஒருபுறத்தே தங்கியிருந்து, இனிய நடையினையும் மெல்லிய சாயலினையும் உடையாளது அழகை நினைந்து மேலும் செல்லாநிற்பர் எனப் பொருள்கடைக் கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் கூறினான் அகம். *377:11.* நகை முத்தினை உடையராகிய பெண்டிரது நிறமூட்டிய நகம்போல, முருக்கிதழ் உதிரும், அகம். *317:5.*

மேலே சுட்டப்பட்டுள்ள பாடல்களில் ஒளிவீசி அழகு செய்யக் கூடியது, துன்புறுத்தக் கூடியது முறுவல், நகை என்பன போன்ற பொருள்களைக் காணமுடிகிறது. நீரர மகளிரோடு முறுவல் தொடர்புப்படுத்தப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சூரர மகளிரைப் போல நீரர மகளிரும் தெய்வ மகளிராவர். நகைத்துக் கொல்லும் தெய்வமாகக் கொல்லிப்பாவை காணப்படுகிறது, முருகும் இவ்வகைப்பட்டதாகும். முருகு இளம்பெண்களுக்கு நோயை உண்டாக்கும் ஆற்றலாக அறியப்படுகிறது. இது "முருகயர்தல்" எனப்படுகிறது. இந்த வகையில் முருகும் ஆவியென விளக்கப்பட வேண்டியதாகிறது. முருகை ஓட்ட வேலனால் வெறியாட்டுச் சடங்கு நடத்தப்படுகிறது.

## வெறியாட்டு

வெறியாட்டம் என்பது முருகு ஏறப்பெற்ற வேலன் ஆவேசமாக ஆடப்படும் ஆட்டமாகும்.

> **"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
> **வெறியாட் டயர்ந்த காந்தளும்"**
>
> ***(தொல். பொருள். 60)***

முருகனுடைய பூசாரியான "வேலன்" முருகனின் ஆயுதமான வேலைத் தாங்கி ஆடுவதால், அவன் "வேலன்" எனப் பெறுகிறான். முருகனை அழைத்து அவன் புகழைப் பாடிக்கொண்டு

வரும்போதே அவன் ஒருவகையான மருளுக்குள்ளாகிறான். முருகு அவன் மேல் ஆவேசித்ததாகக் கருதப்படுகின்றது. அந்நிலையில், அவன் வேலைக் கையில் தாங்கி மருளோடு ஆடுகின்றான்; இறுதியில், முருகனின் அருட்பிரசாதமாக பலியாக முருகனுக்குப் படைக்கப்பட்ட பூக்களைத் தருகின்றான். இது ஒரு சாந்தி வழிபாடாகத் தோன்றுகின்றது.

முருகனுடைய பூசாரியான வேலன் நடத்தும் இம்மருளாடல் வெறியயர்தல், வெறியாடல், வெறியாட்டு எனச் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. “வெறி” என்னும் சொல்லே “மணம்” என்னும் பொருள் தரும் பழந்தமிழ்ச் சொல்லாகும். இச்சொல் தெலுங்கு, கன்னடம், மலையாளம், கோண்டா, குவி, பிராகூய் போன்ற பல திராவிட மொழிகளிலும் இடம்பெற்றுள்ளன. கோண்டா மொழியில் இச்சொல் “வெறி ஆ” என வழங்குகின்றது. மானுடவியலாளர் குறிப்பிடும் சாமனிசத்தோடு தொடர்புடையதாக இச்சொல் கோண்டா மொழியில் இன்றும் வழங்குவது குறிப்பிடத்தக்கது. வேலன் வெறியாடலும் சாமனிசத்தை நினைவூட்டுகின்றது எனப் பாண்டுரங்கன் குறிப்பிடுகிறார்.

காமவயப்பட்ட பெண்களின் உடலில் மாறுபாடு ஏற்படுவதுண்டு. இதனைக் கண்ட தலைவிகளின் தாய்மார்கள் இது நோயென்று எண்ணி கட்டுவிச்சி போன்ற முது பெண்டீரை அழைத்து நோயுற்றக் காரணத்தையும அதைத் தீர்கக வழியையும் கேட்பர். முதுவாய்ப் பெண்டீர் மகளை முருகு அயர்ந்துவிட்டதாகவும் வேலனை அழைத்து வெறியாட்டு நடத்தினால் நோய் நீங்கும் எனக் குறுவர் அவ்வாறே தாய்மார்களும் வேலனை அழைத்து வெறியாட்டு நடத்துவர். (அகம். 22.) ஐங்குறுநூற்றில் வரும் வெறிப்பத்து வெறியாட்டுக் குறித்து சிறப்பாக விளக்குகிறது. வெறியாட்டை பாடியப் புலவர் வெறி பாடிய காமக் கண்ணியார் எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

கறிவளரும் சிலம்பிலுள்ள முருகக் கடவுளைப் பணிந்து அறியாமைமிக்க வேலன் தலைவியின் துயரத்திற்கு முருகனே காரணம் என்றான் (ஐங். 243). 191

தலைவியின் மெல்லிய தோள் நெகிழ்விற்கு முருகனே காரணம் என்று கூறிய வேலனைக் குறுந்தொகையும் கூறுகிறது (குறுந். 111).

வெறியாடும் வேலன் வெள்ளிய பனந்தோட்டொடு கடம்ப மலரைத் தொடுத்துச் சூடிக்கொள்வான். இனிய சீர் அமைந்த தாளத்தோடு கூடிய முருகக் கடவுளின் பெரும் புகழினைக் கூறி ஆடுவான் (அகம். 98:16-19). வெறியாடும் களம் அகன்றதாகவிருந்தது. அக்களத் தின்கண் செந்நெல்லின் வெண்பொறிகள் சிதறிக்கிடந்தன.

**வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்**
**செந்நெல் வான்பொறி சிதறி யன்ன**
**(குறுந். 53)**

வெறியாடும் வேலன் கழற்காயைத் தன் மெய்யிலணிந்து கொண்டான் படிமம் அமைந்த கலத்தினைத் தூக்கிக்கொண்டு முருகனே தலைவியை அச்சுறுத்தியதாகக் கூறினான்.

**பொய்யா மரபின் ஊர்முது வேலன்**
**கழங்கு மெய்ப்படுத்துக் கன்னந் தூக்கி**
**முருகென மொழியும் (ஐங். 245)**

**வெறிக் களத்தில் புது மணல் பரப்பினர்.**
**பெய்ம்மணல் முற்றம் (ஐங். 218)**

வெறியாட்டின் அசைவுக்கு மயிலின் ஆட்டமும் விறலியின் ஆட்டமும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன (பதிற். 51).

## ஆட்டுப் பலி

வெறியாடும்பொழுது ஆட்டுக் குட்டியைப் பலியிடுதல் மரபாகும். அதன் குருதியினைத் தினையரிசியோடு சேர்த்துத் தூவுவர். ஆட்டின் கழுத்தை அறுப்பதோடு தினைப் பிரப்பை வைத்து வழிபட்டனர். 192

மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப் பிரீஇ (குறுந். 265). சிறிய தினையினை மலரோடு விரவிச் சிதறுவதும் ஆட்டுக் கிடாய் அறுப்பதும் திருமுருகாற்றுப்படையிலும் கூறப்பட்டுள்ளது (திருமுருகு. 218), பலவாகிய வேறுபட்ட நிறமுடைய சோற்றையுடைய பலியுடன் ஆட்டுக்குட்டியைக் கொன்று, நோய் கொண்ட பெண்ணின் நறுநுதலை நீவி, முருகனை வேண்டிப் பலியாகக் கொடுக்கும் மரபைக் குறுந்தொகை 362 ஆம் செய்யுளில் காணலாம்.

**களம்நன் கிழைத்துக் கண்ணி சூட்டி**
**வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து**
**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்**
**முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்**
**என்று அகநானூறு (22) கூறுகின்றது.**

வெறியாட்டம் மேவிய மகளிரின் தோற்றப் பொலிவு முதலியவற்றைச் செய்யுட்களில் காணலாம் (குறுந். 366, அகம். 370). இன்னும் இந்த மரபு சிற்றூர்களில் உண்டு தமிழர் நாகரிகமும், பண்பாடும், ப.191.

## ஆவி ஊடகர்கள்

பழந்தமிழில் எந்த ஒரு தெய்வத்திற்கும் உருவமில்லை. அனைத்துத் தெய்வங்களும் ஆற்றல்வடிவினதாகநம்பப்பட்டன. இந்தத் தெய்வங்கள் அனைத்தும் அச்சுறுத்தக் கூடியவை, ஆபத்தைச் செய்யக்கூடியவை என்பது குறிக்கப்பட்டது. கால்டுவெல் இந்தத் திராவிடர்களின் தெய்வம் சார்ந்த நம்பிக்கைகளைச் சாமனியம் என்ற உயரமர் ஆசியாவில் உள்ள வழிபாட்டு முறையோடு ஒப்பிடுகிறார். சாமனிய வழிபாட்டில் நிலையான பூசாரியின்மை; கடவுள் இருப்பில் நம்பிக்கையிருப்பினும் அக்கடவுள்களுக்கென்று தனித்த வழிபாடு இன்மை; ஆவிக் கூடுவிட்டு கூடு பாய்தல் தொடர்பான சிந்தனையின்மை; வழிபடப்படும் பொருள்கள் தெய்வங்களாகவோ நாயகர்களாகவோ கருதப்படாமல் கொடூரமான, பழிவாங்கும் தன்மையுடைய தடுமாற்றமான தன்மைகள் கொண்ட பொருள்: அவற்றிற்கு இரத்தபலி கொடுத்தும் வெறியாட்டு நடத்தியும் வழிபடுபவர். என்று எழுதுகிறார். மேலும் இவ்வழிபாட்டில் வரும் மந்திரவாதியோ! பூசாரியோ தானாகவே வெறியாடல் நிகழ்த்திகொண்டு அந்த சூரணங்கு [demon] தன்னையாக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் அதனுடன் தான் உரையாடுவதாகவும் செயற்புரிவார். இந்தவழிபாடு இந்தியாவில் உள்ள தொல்திராவிட பழங்குடிகளிடமிருந்த பேய் வழிபாட்டுடன் ஒத்துப் போவது மட்டுமல்லாமல் அதே வழிபாடுதான் என நிரூபணமாகிறது. சாமனிய வழிபாட்டில் உரைக்கப்பட்ட ஒவ்வொரு சொல்லும் திராவிடர்களின் பேய் வழிபாட்டுடன் ஒத்துப் போகிறது எனக் குறிப்பிடுகிறார். ஆவி வடிவிலான தெய்வங்கள் மெய்ப்பட்டு சாமியாடும் சாலினி மற்றும் வேலன்கள் ஆடி சடங்கு நிகழ்த்துவது பற்றி சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. வேலன் வெறியாடுவது ஒப்பிட்டளவில் அதிகமாக வருகின்றது. ஆண் தலைமை சமூகத்தின் வளர்நிலை வடிவத்தை இது காட்டுகிறது. தாய்த் தலைமைச் சமூகம் நிலவியநிலை பெண்களே இவ்வகைப்பட்ட ஊடகர்களாக இருந்துள்ளனர். கிராமத் தேவதைகள் மெய்ப்பட்டாடி வாக்குச்

சொல்லும் சாமியாடினிகளை இப்போதும் சிற்றூர்களில் பார்க்கமுடிகிறது.

**வேலன் - பேகன்**

வேலன் ஆடுங்கூத்தை வேலனாடல் என்பர். முருகப் பூசனை செய்வோன் முருகனுக்குரிய வேலை ஏந்தி, அதைத் தனக்கு அடையாளமாகக் கொண்டிருப்பதால் அவனுக்கு வேலன் என்னும் பெயர் வந்தது. அவர் தெய்வமேறி ஆடுவதனால் வெறியாட்டாளன் என்றும், அந்த ஆவேசத்தால் குறி சொல்லுவதனால் படிமத்தான், தேவராளன், சன்னத்தக்காரன் எனப் பலவாறாகவும் அழைக்கப்படுகின்றான். அவன் ஆடும்போது கண்ணி, கடம்பம், காந்தள், கார்காலத்துக் குறிஞ்சி, அலரி ஆகிய முருகனுக்குரிய மலர்களுள் ஒன்றை அணிந்துகொள்வான்

கையில் வேலைக் கொண்டிருப்பதனால் வேலன் எனப்படுகிறான். இந்த வேல் வேலாண் மரத்தால் ஆனது (2011: பக்.87.) இதனால் இது வேல் எனப்படுகிறது என க.பா. அறவாணன் எழுதுகிறார். இப்படியானதொரு குறிப்பைச் சங்கச் செய்யுள்களிலிருந்து பெறமுடியவில்லை. வேல் சிறப்பானதாகவும் பெரும்பான்மையான இடங்களில் பயன்பாட்டிற்குரியதாகப் புகழப்படுகிறது. வேல் போர்க்களத்தில் பெறும் முக்கியத்துவத்தையும் அது பரவப்படும் விதத்தையும் பார்க்கிறபோது கல், மரம் இவற்றையும் தாண்டி இக்கருவி உலோகத்தாலானதாக இருக்கும் எனக் கருதுவது தகும்.

வேல் இரும்பினாலானது என்பதை “வேல் எக்கம்” என்கிற சங்கத் தொடர் வெளிப்படையாகக் காட்டுகிறது. இது போன்றதொரு வேலைக் கையில் கொண்டு முருகேறப் பெற்று ஆடுபவன் வேலனாவான்.

முருகனுக்குரிய ஆறு படைவீடுகளுள் திருஆவிநன்குடி என்பதுவும் ஒன்று. முருகன் ஆவியோடு தொடர்புடையவனாக இருந்தது என்பதற்கு இப்பெயர் பண்பாடு நல்லதொரு சான்றாக அமையக் கூடியது. இங்கிருந்த மக்கள் கூட்டம் ஒன்று ஆவியர் குடி எனப்படுகிறது. பண்டைய நாளில் இம்மக்களின் தலைவனாகப் பேகன் என அறியப்படுகிறான். இவன் வையாவிக் கோ, ஆவியர்பெருமகன் என்றெல்லாம் சங்கப் புலவர்களால் குறிக்கப்படுகிறான்.

> **“வானம் வாய்த்த வளமலைக் கவாற்**
> **கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய**
> **அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்**
> **பெருங்கன் னாடன் பேகன்”**
>
> ***(சிறுபாண் - அடி.14 - 17)***

வேளாவிக் கோ என்பவனும் இந்த பேகனின் முன்னோனாகக் கருதப்படுகிறான் (மு. இராகவையங்கார், 2010:பக்.25.) வடத்திராவிட பண்பாட்டில் பேகா என்கிற ஒரு ஊடகர் ஆவியோடு தொடர்புடையவராக இருப்பது போலப் பழந்தமிழ்ப்பண்பாட்டிலும்பேகன்என்பவனும் ஆவியோடு தொடர்புடையவனாகக் காணப்படுகிறான், வேல் என்கிற தமிழ்ச் சொல் தொல் திராவிட மொழியில் பேல்கா அல்லது பேகா எனப்பட்டிருக்க வேண்டும். பேகன் அல்லது பேகா என்கிற பெயரைத் தமிழக மக்கள் இட்டு வழங்குவது பற்றித் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் வேலு, வேலன், வேலுசாமி போன்ற பெயர்களை இட்டு வழங்குகின்றனர். திரட்டி விளக்கப்பட்டுள்ள தரவுகளின்படி முருகோடு தொடர்புடைய வேலனும், ஆவி வந்தாடும் பேகா என்பவனும், ஆவியர் பெருமகன் பேகனும் ஆவியோடு தொடர்புடையவர்கள் என்பது பெறப்படுகிறது, இந்த ஆவி வழிபாடே தொல் திராவிடர் மற்றும் பழந்தமிழர் தெய்வப் பண்பாட்டின் உயிர்நாடி.